# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 03.07.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 641/SCIC/2023**

திரு. கு.காந்திராஜன் (எ) சக்திகாந்த் — புகார்தாரர்
த/பெ.சு.குருநாதப்பிள்ளை
44, இ, சுப்பையாப்பிள்ளைத் தெரு
பட்டுக்கோட்டை - 1, தஞ்சாவூர் மாவட்டம்.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
பட்டுக்கோட்டை.

**ஆணை**

இவ்வழக்கின் விசாரணை ஏற்கனவே 13/05/2025 அன்று ஆணையத்தால் நடத்தப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> **9. மேலும், மனுதாரரின் சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான 25/07/2022 தேதியிட்ட மேல்முறையீட்டு மனுவிற்கு தகவல் ஏதும் வழங்காத முன்னாள் மேல்முறையீட்டு அலுவலருக்கு ஆணையத்தால் வழங்கப்பட்ட காரணம் கேட்பு விளக்கக் குறிப்பாணைக்கான விளக்கத்தினை மேற்படி அலுவலர் 19/06/2025 தேதிக்குள் ஆணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிடப்படுகிறது. மேற்குறிப்பிட்ட காரணம் கேட்பு விளக்கக் குறிப்பாணைக்கான விளக்கமானது மேற்படி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட பின், அது ஆணையத்தால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அதனடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்வது குறித்து முடிவு செய்யப்படும்.**

**2. மேற்குறிப்பிட்டவாறு, முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர் திரு.வீ.பிரபாகர், தற்போது துணை ஆட்சியர் மற்றும் கலால் மேற்பார்வை அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களிடமிருந்து 02/06/2025 தேதியிட்ட தனது காரணம் கேட்பு விளக்கக் குறிப்பாணைக்கான விளக்கம் ஆணையத்தால் பெறப்பட்டது. அக்காரண விளக்கத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

“மேற்படி தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் வழக்கு எண்.CP 641/SCIC/2023 நாள் 13/05/2025-ன்படி பிறப்பிக்கப்பட்ட மாநில தலைமை தகவல் ஆணையர் அவர்களின் ஆணையின் பேரில் எனது விளக்கத்தினை பின்வருமாறு தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் மற்றும் நகரம் 44-இ, சுப்பையாப் பிள்ளைத் தெரு என்ற முகவரியைச் சார்ந்த திரு.கு.காந்திராஜன் (எ) சக்திகாந்த் த/பெ.சு.குருநாதப்பிள்ளை என்பவரால் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் புகார் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தொடர்பாக கீழ்க்காணும் விவரங்கள் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. மனுதாரர் கடந்த 23/05/2022 அன்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 6(1)-ன் கீழ் அளித்த விண்ணப்பத்தின் மூலம் கோரிய தகவல்கள் தொடர்பாக பட்டுக்கோட்டை வருவாய் கோட்ட அலுவலக பொது தகவல் அலுவலரால் த.ப.51/2022/அ4 நாள் 13/06/2022-ன்படி மனுதாரர் கோரிய கோப்பு மேற்படி அலுவலகத்தில் தேடப்பட்டு வருகிறது எனவும், கோப்பு கிடைக்கப் பெற்றவுடன் தகவல் தெரிவிக்கப்படும் என்ற விவரம் மனுதாரருக்கு தகவலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. இந்நேர்வில் மனுதாரர் கடந்த 26/07/2022 அன்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 19(1)-ன் கீழ் அளித்த மேல்முறையீட்டு மனுவில் கோரிய கோப்பு தொடர்பாக பட்டுககோட்டை வருவாய் கோட்ட அலுவலக பதிவறையில் தொடர்ந்து தேடப்பட்டும் குறிப்பிட்ட காலவரையறைக்குள் கிடைக்கப் பெறவில்லை என்பதால் உரிய தேதிக்குள் பதில் அளிக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. மேற்படி மனுதாரரின் கோரிக்கை தொடர்பான கோப்பு தேடுவதற்கு தொடர்ந்து முயற்சி செய்து வந்த காரணத்தால் சம்பந்தப்பட்ட கோப்பு பதிவறையிலிருந்து தேடி எடுக்கப்பட்டு பட்டுக்கோட்டை வருவாய் கோட்ட அலுவலகத்தில் த.ப.51/2022/அ4 நாள் 21/01/2023-ன்படி மனுதாரர் கோரிய தகவல் மற்றும் கோப்பின் நகல்கள் மனுதாரருக்கு நேரில் வழங்கப்பட்டு நகல்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல (கையொப்பத்துடன்) பெறப்பட்டுள்ளது.

4. இந்நேர்வில், மனுதாரர் கோரிய கோப்பு மற்றும் தகவல்கள் தொடர்பாக பட்டுக்கோட்டை வருவாய் கோட்ட அலுவலக பொது தகவல் அலுவலரால் த.ப.51/2022/அ4 நாள் 13/06/2022-ன்படி மனுதாரர் கோரிய கோப்பு மேற்படி அலுவலகத்தில் தேடப்பட்டு வருகிறது என்ற விவரத்தினை மனுதாரருக்கு முறையாக தெரிவிக்கப்பட்ட காரணத்தினாலும் மேல்முறையீட்டு மனு தொடர்பாக பட்டுக்கோட்டை வருவாய் கோட்ட அலுவலக பதிவறையில் தொடர்ந்து தேடப்பட்டும் குறிப்பிட்ட காலவரையறைக்குள் கிடைக்கப் பெறவில்லை என்ற காரணத்தினாலும் மனுதாரருக்க குறிப்பிட்ட கால வரையறைக்குள் கோப்பு தொடர்பான நகல்கள் வழங்க இயலவில்லை என்பதை வருத்தத்துடனும் பணிவுடன்

தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், மனுதாரரின் கோரிக்கை தொடர்பாக கோப்பு தேடுவதற்கு தொடர்ந்து முயற்சி செய்து வந்த காரணத்தால் சம்பந்தப்பட்ட கோப்பு பதிவறையிலிருந்து தேடி எடுக்கப்பட்டு அந்த அசல் கோப்பிலிருந்து மனுதாரர் கோரிய அனைத்து தகவல்களும் நேரில் கடந்த 21/01/2023 அன்று வழங்கப்பட்டுள்ளது என்பதையும் இனிவரும் காலங்களில் இது போன்ற குறைபாடுகள் ஏதும் நிகழா வண்ணம் தொடர்ந்து பணிபுரிவேன் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, மேற்படி விளக்கக் குறிப்பாணைக்கு என்னால் அளிக்கப்பட்ட விளக்கத்தினை பரிசீலனை செய்து தகவல் அறியும் உரிமைச் சட்டம் சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)ன் படியான நடவடிக்கையிலிருந்து விடுவிக்குமாறும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்."

**3. திரு.V. பிரபாகர், முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர்/தற்போது துணை ஆட்சியர் மற்றும் கலால் மேற்பார்வை அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களின் காரண விளக்கத்தை ஆணையம் ஏற்கவில்லை. மனுதாரருக்கு, தகவல் அறியும் உரிமைச் சட்டம்-2005-ன்படி மேல்முறையீட்டு அலுவலராக, 30 நாட்களுக்குள், அதிகபட்சம் 45 நாட்களுக்குள் காலதாமதத்திற்கான காரணத்தினையும் தெரிவித்து தகவல் வழங்க வேண்டியது இவரது கடமையாகும். மனுதாரருக்கு எவ்வித தகவல் / பதிலையும் மேல்முறையீட்டு அலுவலர் வழங்கவில்லை. தற்போது, இவர் துணை ஆட்சியர் மற்றும் கலால் மேற்பார்வை அலுவலராக பணியாற்றி வருகிறார். எனவே, ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சேப்பாக்கம், சென்னை அவர்கள், இவ்வாணை கிடைக்கப் பெற்ற இரண்டு மாத காலத்திற்குள், மேற்குறிப்பிட்ட அலுவலர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, அவ்வறிக்கையினை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று, கேட்டுக் கொள்ளப்படுகிறார்.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 641/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1.ஆணையர்
மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்
சேப்பாக்கம், சென்னை-600 005.

2.பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
பட்டுக்கோட்டை.

3.திரு.வீ.பிரபாகர்
முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர்/ வருவாய் கோட்டாட்சியர்
(தற்போது) துணை ஆட்சியர் மற்றும் கலால் மேற்பார்வை அலுவலர்
தி/ள்.அக்கார்டு டிஸ்டிலரிஸ் மற்றும் புருவரிஸ் லிமிட்
இளையனார்வேலூர் கிராமம், வாலாஜாபாத் வட்டம்
காஞ்சிபுரம் மாவட்டம்.

**புகார்தாரர்**
திரு. கு.காந்திராஜன் (எ) சக்திகாந்த்
த/பெ.சு.குருநாதப்பிள்ளை
44, இ, சுப்பையாப்பிள்ளைத் தெரு
பட்டுக்கோட்டை - 1, தஞ்சாவூர் மாவட்டம்.

நகல்
1.மாவட்ட ஆட்சித் தலைவர்
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
தஞ்சாவூர்

2.பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035.

RG/PC